முருகப்பெருமான் துணை

**மகான் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.03.2023**, வெள்ளிக்கிழமை

1. ஞானிகள் பூசை செய்து உலகோர்
ஞானம் பெற உயர் வழிகாட்டும்
ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சால் திங்கள்
குறைவிலா மூவாறோர் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் **19** ம் நாள் **03.03.2023**, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு சுந்தரமூர்த்தி நாயனார் யானும்
3. யானுமே உலகநலமுற உரைப்பேன்
உயர்வான ஞான நெறி காட்டும்
ஞானதேசிகன் மேல் உலகமக்கள்
நம்பிக்கை வைத்து வருதல் காண
4. காணவே உலகோர் தனக்கு
கலியிடரை வெல்லும் பலமும்
ஞானமும் உயர் குணமும் கூடி
ஞானிகளாகும் வாய்ப்புப் பெறுவர்
5. வாய்ப்புத் தந்து பிரணவக்குடிலில்
வரம்பல வழங்கி அருளி வர
மெய்ஞானம் பெறும் நோக்கில்
மேலான வழிதேடி அலையும் மக்கள்
6. மக்களெல்லாம் அரங்கன் வாழ்
மாதரும சாலையை நாடி
தேக்கமின்றி அருளமுது உண்டு
தொண்டாற்றி பொருளுதவி செய்து
7. செய்துமே சிவ தீட்சை எனும்
சித்திமிகு தீட்சை அடைந்து
மெய்யான சர்வபலமும் கிட்டி
மேலவர்கள் ஆசி துணைபட
8. துணைபட ஞானவான்கள் எனும்
தெளிவு கண்டு தேறுவர்
இணையிலா ஞானத் தலைவனை
இப்பிறப்பே தரிசிக்கும் வாய்ப்பும்
9. வாய்ப்பும் சூழலும் கனிந்து
வரத்தால் சகல அனுகூலமும்
அய்யமிலா கண்டு சிறப்பர்
ஆக்கமுடன் ஞானிகளை தொடர்ந்து

10. தொடர்ந்துமே உலகம் எங்கிலும்
தேசிகனார் நாமசெபம் போற்றி
இடர்களை வென்று மீட்கும்
இணையிலா சக்திகளாக மாறி

11. மாறியே உலகம்தனில் ஞானிகள்
மார்க்கமுடன் வெளிப்படும் வண்ணம்
தெரிவிப்பேன் சேவை ஆற்றி திளைப்பர்
தெரிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–